

27-03-2018

# மின் இதழ்

பதிப்பு 20

படைப்பு குழுமம்

விடிவதற்கு இன்னும் கொஞ்சம் நேரமிருக்கிறது.
குழந்தைகள் சோம்பலாக எழுகிறார்கள்.
தூக்கத்தின் பாலருந்திக் கொண்டிருக்கும் போதே
தன் மார்வுகளை உதடு நீக்கி
கச்சைக்குள் திணித்து எழுந்து செல்லும்
இரவுத்தாயை பிரிவது குழந்தைகளுக்கு
அவ்வளவாக பிடிப்பதில்லை போலும்.
மார்பை விலக்கிய பிறகும்
பாலருந்துவது போல அசையும் அவர்களது உதடுகளை பார்த்து
வெளிச்சக் கூட்டங்கள்
வேடிக்கையாக சிரிக்கின்றன.
நோயின் நச்சரிப்பால் இரவெல்லாம் விழித்திருந்த என் தாய்
இப்போதுதான் உறங்குகிறாள்.
காலை தனது தைல விரல்களால் அவள் மூச்சுக்காற்றை மெல்ல
நீவிவிடுகிறது.
காலை நேர படிகட்டுகள் எனக்கு முன்னே எழுந்துவிட்டன.
அதன் வழியாகத்தான் வெளிச்சம் இறங்கி
வாசலுக்கு வந்திருக்கவேண்டும்.
மனைவி எழுந்து பெரிய சிக்கல் கோலமொன்றை
வாசலில் போடுகிறாள்.
நான் பீதியாகிவிட்டேன்.
நல்லவேளை கோலத்தில் கால்சிக்காமல்
நடந்து வர தெரிந்திருக்கிறது இந்த காலைக்கு.
நான் எப்போதுமே அதிகாலையிலேயே
எழுந்துவிடுவேன்.
அப்போதுதான்,
கருப்பு எலிகளென தொட்டிச் செடிகளுக்கு அடியில் பதுங்கி இருக்கும்
இரவின் எச்சங்களை
சரேலென பாய்ந்து கவ்வும் வெளிச்சப்பூனைகளை பார்த்து ரசிக்கமுடியும்.
நீங்களும் அதிகாலையில் எழுந்து
பூமிஎங்கும் வழியும்
வெளிச்சத்தின் வேர்களை
வாயிலிட்டு சுவைத்துப் பாருங்கள்.
பகலின் ருசி என்பது
ஆயிரம் கவிதைகளின் தித்திப்பு என்பது
அப்போது புரிந்துவிடும்.

**கார்த்திக் திலகன்**



.

கண்ணீர் குட்டைகளை தாண்டி
யாருடைய கதறலுக்கும் செவிமடுக்காத
ஒரு குதிரை
பறை மீது மிக வேகமாக ஓடுகிறது, பனைமரம் ஏறி எங்களை
படிக்கவைத்த அப்பா
கழுத்தில் மாலைகளோடு ஒரு பேரரசனைப்போல
அதில் பயணம் போகின்றார்
சகோதரியும் நானும் கண்ணீர் மல்க
அவர் மறையும்வரை பார்த்தபடி நின்றோம்.
இனி திரும்பிவராதவருக்காக
பாதையெங்கும் அடையாளமிட்ட
பூக்களால் வீதியெங்கும் ஒரே ரோஜாத்துயரம்.
குதிரையெடுப்பெல்லாம் முடிந்து
குளிக்கும் பொருட்டு
மண்ணில் இறக்கிவைக்கப்பட்ட
இரண்டு பறைகளும் களைத்திருந்தன.
அம்மாவின் கண்களைப்போல

**நிலாகண்ணன்**



ஒரு கவிதையின் கருக்கலைப்பு
ஒரு முத்தத்தின் மரணம்
ஒரு பூவின் கண்ணீர் துளி
ஒரு புன்னகையின் வலி
ஒரு வனத்தின் கதறலொலி
இவையேதும் அறியாதது போல
உன் மௌனத்தை தொடர்கிறாய்.... நீ
யாதொரு வழியுமின்றி என் உசிருக்கான
உத்திரவாதத்துடன் உன்
மௌனங்களுக்குள் ஒளிந்து கொண்டேன்..... நான்

**மாரி கார்த்தி**

# பழச்சாறின் ஒழுக்கு

நிறைவேற்றப்படா
பல்லாயிரம் ஆத்மாக்களின்
ஒற்றைக் குரலொலி
உன் தாபம்..,
கருணை சேர்;
கற்பூரம் முகிழச் செய்;
கனன்று உதிரா
ஊதுவத்தியின் சாம்பலை
ஊது என
விளிப்பதும், மிழற்றுவதுமாக
இருண்ட அறையின்
தனித்த உயிராய்ப் புலம்புவது
புரிகிறது தான்.
என் செய?
சொடக்குத் துளிகளில்
வெளி நனைத்து,
உள் அனலை அப்படியே
வைத்திருக்கும்
ஒற்றைகளில் ஒன்றுமில்லையே.,
மூழ்கி எழுந்து
உள்ளும் புறமும்
நீர் வடிய
வெடவெடக்கும் பெரும் போதின்போது
கலக்கும் பேறை அல்லவா
யாசித்தலின் தாத்பரியம்?

**வேதநாயக்**



# உதிரப்போக்கு

சிறுவயதில் அம்மாவிற்கு
உண்டான திடீர் கருச்சிதைவின் பொழுது
அப்பா கட்டிலுக்கடியில் வழிந்தோடிய
உதிரத்தை இருகைகளாலும்
அள்ளியெடுத்து வாளியில் சேகரித்து
அப்புறப்படுத்தி பின் தரையலம்பியதை
பார்த்தவள் நான்.

பின்னொரு நாளில்
யாருமற்ற நேரத்தில்
பிரசவ வலிகண்ட எனக்கு இளையவளை
உடன் பிறந்த தம்பி உதிரம் வழிய
இரு கைகளிலும் அள்ளியெடுத்து
மருத்துவமனைக்குள் கொண்டு சென்று
ஆண் மகவென அறிவிக்கும் வரை
அருகே தனித்திருந்து காத்தான்

இன்று வரை மாதாந்திர நாட்களில்
மகனே எனக்கு நேப்கின்
வாங்கித் தருகிறான்

மறைத்துச் செல்ல இதுவென்ன
தவறுக்கு பிறந்த நோயா?

மறைத்து மறைத்தே வலி
உணர்த்த தவறினோம்
புரிந்துகொள்ள இடமிருந்தும்
புரியவைக்க மறுத்தோம்

தலைவலியைச் சொல்ல
தவிர்ப்பும் தவிப்பும் கொள்வதில்லை

தனி வலியைச் சொல்ல
தடுப்பெதற்கு?

பொதுவெளியில் இதைப்பேசி
புரிதலை ஏற்படுத்தாதது
யார் குற்றம்

பயணத்தின் பொழுதும்
இருக்கை பார்க்கும் பதட்டம் தவிப்போம்

இது இயல்பு
இது இயற்கை
இதுவே ஆரோக்கியம்

இதற்கெதற்கு அச்சமும் நாணமும்

ஆண் அறிவான் அவஸ்தையை
வலி நிவாரணி அவன் வார்த்தைகள் என

சொல்லுங்கள் தொடக்கமும் முடிவும்
சொல்லாத வலி அறியப்படாது...

புரிதலான பாதையில் முள்ளில்லை...

**லதா நாகராஜன்**

# ஆலாபனை

பருத்தி நூல்களைப்போன்று
இலவம் பஞ்சுகளைப்போன்று
சொற்களை அள்ளி கவிதை
நெய்யக்கற்றுக்
கொண்டிருக்கிறேன்...

இரும்புத்தொழிற்சாலையின்
இயந்திரங்களின் துருப்பிடித்த
திருகாணிகள் தாள்களின்
தகரங்களை துளைத்து
மேவிக்கொண்டிருக்கின்றன...

கொலைக்கொலைகளாய்
குவிந்துக்கிடக்கும் கோழியின்
இறக்கைகளின் நீட்சிகளை
விரல்கள் தடவ எத்தனிக்கிறது...

எலுமிச்சையழகின் கம்பளிப்புழு
நெளிந்து நெளிந்து ஊர்கையில்
பச்சைநிறங்களை தவிர
வேறெதும் வண்ணங்கள்
கண்களுக்கு புலப்படவில்லை...

வானவில்லை உடைத்து பிறந்தெழும் வண்ணத்துப்பூச்சிக்கும்
அதமரும் வண்ணப்பூவிற்க்கும்
பனித்துளிக்கும் ஆலாபனைகள்
இசைக்கப்படுகிறவேளையில்

வேலிப்போட்டுக்காத்துக்கொண்டிருக்கும் வேலிக்காத்தான் பூவிடம்
யாதொரு பட்சியும் பேசிக்கொண்டிருப்பதில்லை...

காதினோர திருகாணிகளின்
அலங்கார அழகின்பதிவைவிட
இயந்திரங்களின் உயிர்க்காக்கும்
துருப்பிடித்த திருகாணிகள்
உதிர்த்துக்கொண்டிருக்கிறது
என்னிடம் சில கவிதை துருக்களை...

ராம் பெரியசாமி



# அம்மா கனவில் வருகிறாள்

வீடு திரும்பிக் கொண்டிருப்பதாக
பூமிக்கு புதிய வஸ்திரம் தைத்துக் கொண்டிருப்பதாக
பூக்களுக்கு சாயமேற்றும் நீராக
இரத்தத்தில் வழுக்கி விழுவதாக
தனது பிள்ளைகளின் நாமங்களைப் பாடும்
உடலற்ற குரலாக
வார்த்தைகளைப் பாறைகளிலிருந்து எடுப்பவளாக
சூரியனின் பற்களுக்கு தைலம் கொண்டு செல்வதாக
வீட்டுக்கு மலையூற்று நீர் தெளிப்பதாக
வீழும் மரங்களை தாங்கிப் பிடிப்பதாக
மின்மினியின் வயிற்றில் ஒளியாய் கசங்குவதாக
விதைகளாகிச் சிதறுவதாக
சிலையாக
பசிகளைச் சிலுவையாக வரைபவளாக
வெளியை கைத்தடியாய் சுருட்டுவதாக
வெற்றிலைக் கொடியின் குருத்தாக
மரணத்தை ஓடிப்பதாக
வாசல்படியில் கண்களாக
உச்சி வகிடில் முத்தங்களாக
பட்டாம்பூச்சியின் அமைதியாக
முத்திரைகளில் நிற்பதாக
நட்சத்திரங்களை ஒழுங்கு செய்வதாக
அக்கினிக் காட்டை வலக்கரத்தில் ஏந்தியவளாக
இடக்கரத்தில் குளிர்காலத்தை தாங்குவதாக

அம்மா கனவில் வருகிறாள்

**தேன்மொழி தாஸ்**



# இவன் மன்னிக்கபட வேண்டியவன்

மகரந்த பிரியங்களை மனதுக்குள் புதைத்து
மதுக்கலால் குடல்களை நிரப்பியவன்......

தேனுறும் நேசங்களை நெஞ்சுக்குள் விதைத்து
சாராயச் சாற்றினால் மூளையை கழுவுபவன்.....

உள்ளங்கைக்குள்
ஆயிரம் பட்டாம் பூச்சிகளை வளர்த்து
உதட்டுக்குள் விச தண்ணீர் ஊற்றி
தன் வேர்களை படச் செய்பவன்......

பாதங்களுக்குள் லட்ச சிற்றெரும்புகளுக்கு
கூடமைத்து விட்டு...
தன் பயணங்களை முடக்கியவன்...

மூச்சிக்காற்றில் குடிலமைத்து
ஊசல்களின் வாழ்வாதாரத்தை நிரந்தரமாக்கியவன்......

இவன்
மன்னிக்கப்பட வேண்டியவன்.....

வீட்டை விற்று
நாட்டை மீட்க போராடியவன்......

சமூக தாகம் முட்டி மோதி பெருக்கெடுத்த ஒரு காலத்தில்
பெருஞ்சாதியென்றும் சிறுசாதியென்றும்
பெண்சாதியென்றும் ஆண்சாதியென்றும்
பிரித்தாழ்ந்த சூழ்ச்சியாளர்களின்
செவியில் உரக்க உரைத்தவன்
உயிர்சாதி ஒன்றைத் தவிர சாதியென்று ஏதுமில்லையென்று...

தற்போதெல்லாம் விலைபோன அரசியல் எண்ணியும்
விலைபோன மக்களை எண்ணியும் தன் தியாக உணர்வுகளை
மது தாயின் மடியில் போட்டு தாலாட்டிக் கொள்கிறான்....

குஞ்சுகளை அடைகாக்கும் தாய் பறவையாய்.....
சமூகம் காக்க துணிந்தவன்....
குஞ்சுகளின் வஞ்சக கல்லெறிதலால் சுருண்டு வீதியில் விழுந்துவிட்டான்
தொட்டு தூக்க நாதியற்று....

மதுவிசத்தை விட
மனித விசமல்லாவா கொடூரமானது.....

ஆயினும்;
தற்போது நிகழும்
எத்தனையோ சாலை விபத்துகளை கண்டதும் செல்பி எடுக்கும்
டிப்டாப் ஆசாமிகளுக்கு மத்தியில் எத்தனையோ ஜீவன்களை
ஆம்புலன்சுக்காக காத்திருக்காமல் தன் தோளில் சுமந்து
காப்பாற்றியிருக்கும்

மது புழுக்கள் நிரம்பிய இவனில் மனிதம் பார்க்கிறேன்......
மனிதமில்லா மது அருந்தாதவனை புழுக்கலாய் பார்க்கிறேன்........
இவன் மது அருந்தாத வரை மனிதன்.....
அருந்திய பின் மாமனிதன்.......

இனி.....
இவன் மன்னிக்கபட வேண்டியவன்...

ஆனால் மன்னிக்கும் தகுதிதான் இங்கு என்னைப்போல்
யாவருக்குமில்லை...

சுயம்பு

அஸ்தமனம் காணா இதழ்களை
வரமாய் பெற்றவள் அவள்
ஊதா ஒட்டிய டியுலிப் மலர்களின்
வாசம் அவள் புன்னகையில் எப்போதுமிருக்கும்!!

கனத்துப்போயிருக்கும்
சிவப்பு வானத்தின் மௌனங்கள்
உடைந்து அழும்போது ஏந்திக்கொள்ளும் கடலைப்போல்
அவளின் விழிகள் எப்போதும்
அலை எழுப்புவதை நிறுத்துவதேயில்லை !!

இறந்துபோன உடலில் ஊர்ந்து செல்லும்
கரையான்களின் மகிழ்ச்சியில்
உயிர்பெறுமவன் நினைவுகளை
மண்ணோடு புதைப்பதிலே கவனமாக இருப்பாள்,
அதில் தினமும் தோற்றும் போவாள்!!

அவள் கனவுகளின் முடிவில்
அவனே நிறைந்திருப்பான்!!
வற்றிய வார்த்தைகளை அவள் உதடுகளில்
நனைத்துச்செல்வான்!!

இறுகப் பற்றிக்கொள்ளும்
அவள் கரங்களை விட்டு
காற்றைப்போல் நழுவிச்சென்று கரைந்து போனான்,
கனவும் கலைந்திருந்தது!!

க்லாராவின் உதடுகள் மட்டும் இன்னும் ஈரமாய்
இருக்கிறது!!

**சப்னா செய்ன்**



# கைகள் கட்டப்பட்ட கடவுள்

கைகள் கட்டப்பட்டு
கிழக்கிலிருந்து மேற்கே போய்
மறைகிறான் சூரியன்.

கைகள் கட்டப்பட்டு
வானத்திலிருந்து பூமியைப்
பரிதாபக் கண்களோடு
பார்த்துக்கொண்டிருக்கிறான் சந்திரன்.

கைகள் கட்டப்பட்டு
கிளைகளை அசைக்க முடியாமல்
காய்த்துக் கொண்டிருக்கின்றன
மரங்கள்.

கைகள் கட்டப்பட்டு
சிந்தனை செய்த கவிதையை எழுத முடியாது
தீனமாக முணகிக் கொண்டிருக்கிறேன் நான்.
"இந்த பூமியின் தானியங்களில்
ஒன்றில் கூட மதுவின் பெயரை
ஏன் எழுதவில்லை கடவுளே?"

கைகள் கட்டப்பட்டு
இக்கவிதையைக் கேட்டபடி
தனக்குப் படைக்கப்பட்ட
உணவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்
கடவுள்.

பிருந்தா சாரதி



இந்த நிமிடம்வரை
காற்று உள்ளே போய்
ஏதேனும் ஒரு வழியாக
வெளியே வந்து கொண்டுதான் இருக்கிறது
ஒன்றும் பிரச்சனையில்லை.
இனி வழக்கம் போல் எதையாவது
தேட வேண்டும்.
முதன்முதலில் சிரிப்பை
தொலைத்து விட்டு தேடிய போது
துணைக்கு ஆளில்லாமலில்லை.
என்னையும் அவ்வப்போது தேடிக்கொண்டு கிளம்பி விடுவேன்.
ஏமாற்றங்கள்தானே வாழ்க்கையை சுவாரசியப்படுத்துகின்றன..
இந்த மனுசப்பயலிடம் பழகுவதற்குபதிலாக
பேசாமல் கடவுளிடமே பழகியிருக்கலாம்
என அவ்வப்போது தோன்றும்
எல்லாக் கடவுளும் வாங்க பழகலாம்
வகையறாதான்..
கடவுள் மட்டும் தக்காளித்தொக்கா?
கடவுளிடம் பழகுவதற்கு பதில்
விலங்குகளுடன் புழங்கியிருக்கலாம்...
ஹைபிரிட் கார்ப்ரேட் விலங்குகள்தான்
தென்படுகின்றன..
விலங்குகளுக்கு பதிலாக
செவ்வாய் வாசியுடன் பழகியிருக்கலாம்..
இப்போதைக்கு செவ்வாய் மனிதனுக்கு பிரச்சனையில்லை..
செவ்வாய் மனிதனா?
செவ்வாய் கடவுளா?
செவ்வாய் விலங்கா?
அடடா....
இப்போது நாம் எதைப்பற்றி பேசுகிறோம்
சிரிப்பை பற்றியா
மனிதனைப்பற்றியா
கடவுளைப்பற்றியா
விலங்கைப்பற்றியா
மனிதம் பற்றியா
அதை விடுங்கள் ...
இப்போதைக்கு உடனடியாக
செவ்வாய்க்காரனுக்கு
மனித ரத்தம் தோய்த்த ஆயுதங்களை
சப்ளை செய்ய வேண்டும்.

**தோழன் பிரபா**

நீர் வற்றியோடும் ஆற்றின்
இரண்டாம் படித்துறைக்கருகில்
மணல் மேட்டில் நிற்கும்
வளைந்து நெளிந்த
ஒற்றைப் பனையினடியில்
சாத்தியிருக்கும் முனை மழுங்கிய
நீண்ட அரிவாளின் உயரத்தைவிட
சின்னதாய் ஒரு அய்யனார்.
ஒற்றைப் பனை சரி..
குட்டை அய்யனார் எவ்விதத்தில் சேர்த்தி.
யாரைக் காவு கொண்டதில்
வெம்பிச் சிறுத்தார் இவர்.
அய்யனார்க்கு பனையும்
பனைக்கு அய்யனாரும் துணை.
இருவருக்கும் முனைமழுங்கிய
நீண்ட அரிவாள் காவல்.

**சுரேஷ் பரதன்**

.

அதீதமாய் எரிகின்றன
பச்சை விறகுகள்
எரிகணை ரவைகள்
எரிபந்தம் ஏற்றித்
தழைக்கும் அனல்வெயில்

சிரிப்பொலிகள் துகளாய்ச்சிதறி
உணர்வற்று ஒடுங்கி
அடங்கியிருக்கும்
பேழை முத்துக்களுக்குள்
மழை மேகங்கள்

எத்தனை முறை சிவக்கும்
செங்கடல் நிறையும் குருதி
தகர்த்தெறிய
பிதிர்காட்டில் விளைந்த
களைமுட்களா
மொட்டுக்கள்

மௌனத்தில் உறைந்திருக்கும்
மனிதத்தை
சாட்டை கொண்டு
மயிலிறகு வருடலெனத்
தடவிக்கொண்டிருக்கட்டும் உலகு

மின்ஹறா



ஊதிய உயர்வால்
வாழ்வில் முன்னேற்றம் இல்லை
பலூன் வியாபாரி

சாண்டில்யன் விவேகானந்தன்

ஒரு மலையை வரைகிறேன்...
வரைந்து முடிப்பதற்குள்
முழுதாய் துளிர்த்து விட்டிருக்கிறது மலை..
தீட்டத் தீட்ட தூரிகைகள் மரத்திலிருந்து
கனிகளை கவர்ந்து வருகின்றன...
ஓவியக் கனிகள் சுவைக்க பறவைகள்
வரிசையில் அலகுகள் திறந்து நிற்கின்றன..
மலைகளில் கொட்டும் அருவியிலிருந்து
குளிர் காலக்கிழவனொருவன்
சணல் கோணிகளால் நீரை மொள்ளுகிறான்...
தண்ணீர் நிரம்பிய கோணிகளை
மேகங்கள் சுமந்து சென்று கொட்டும்போது
அவை பூக்களை சிந்துகிறது...
சிதறும் பூக்களில் வழிந்தோடுகிறது இசை...
தொட்டுப்பார்த்ததில்
இசை முழுக்க இருள் நிரம்பிக்கிடந்தது...
அது ஆதியின் நிறத்தில் இருந்தது...
இசையின் இருளை ஒரு சூரியத்துண்டின்
வாசலில் வைக்கிறேன்...
புரியாத ஒரு கவிதையை
தன் எண்ணங்களுக்கேற்ப
எழுதிக்கொள்ளும் ஒரு ரசிகனைப்போல்
இசையின் கருமையை தன் போக்கில்
சுவைக்கிறது சூரியத்துண்டு...
இருளைத்தின்றதும் சூரியனின் ஒளி
ஒரு புரட்சியின் கண்களை சூடிக்கொள்கிறது..
அது கோபங்களுக்காக கிளர்ந்தெழும்
உன்னைப்போலவே இருந்தது...

**சந்துரு**



# தயைசெய்து என்னை தனித்து விட்டு விடாதீர்கள்

பிரிவின் வலியால் வழிந்துகொண்டிருந்த
யாரோ ஒருவரின் கண்ணீரை தன் கரங்களால்
காற்றை இழுத்து துடைத்துக்கொண்டிருந்ததோர் மரம்

துன்பத்தின் வேதனைதனில் துடித்துக்கொண்டிருந்த
எவரோ ஒருவருக்கு போதனை செய்துக்கொண்டிருந்ததோர் மரம்

மழை நின்றபின்னும் தன் கரங்களில் மழைநீரை ஏந்தி
காற்றோடு கைகோர்த்து தன் மெய் சிலிர்த்து
பிறர் மேனி சிலிர்க்கச்செய்துக்கொண்டிருந்ததோர் மரம்

விபத்தொன்றில் விழுந்து மரித்தவருக்காக
மௌன அஞ்சலி செலுத்திக்கொண்டிருந்ததோர் மரம்

நெடுஞ்சாலைக்கும் வண்ணக்குடையாய்
வாழ்ந்துகொண்டிருந்ததோர் மரம்

மனிதம் மரணித்ததைக்கண்டு மழைநாளொன்றில்
மௌனமாக அழுதுகொண்டிருந்ததோர் மரம்

நம் ஆயுளை நீளச்செய்துகொண்டிருந்த
அப்புனிதர்களை இப்போது கொலை செய்துகொண்டிருக்கிறார்கள்

நம் ஆர்பாட்டங்களை, ஆரவாரங்களை, அவலத்தை, ஆணவத்தை இப்படி
அனைத்தையுமே அமைதியாய் பார்த்துக்கொண்டிருந்த
நெடுஞ்சாலை இப்போது கதறிக்கொண்டிருக்கிறது
"தயை செய்து என்னை தனித்து விட்டு விடாதீர்கள்!"

**நிவேதா சுப்பிரமணியம்**

அம்முக்குட்டி
மெல்ல மெல்ல நடக்கும் ஒரு குட்டி அன்னமாக
கண்களில் வாழ்கிறாள்

அப்பா எப்ப வீட்டிற்கு வருவே
அப்பா எப்பவுமே லேட்தானா
அப்பா எனக்கு அதை வாங்கிதான்பா
அப்பா அம்மா என்ன அடிக்குது என
அவள் குழைந்து மழலையிடும் கணங்களில்
இதயத்தில் அசைவது வேறென்ன
பேரன்பின் நாணல்களே

பள்ளிவீட்டு வீடு திரும்பும்
அம்முக்குட்டியின் நிழலில் நான் எப்போதும் இருப்பேன்
பணிமுடிந்துவிட்டு திரும்பும் எனது உள்ளங்கை
அம்முக்குட்டியின் விரல்களை பற்றிக்கொள்ளவே விரையும்

கேட்டின் கீறிச்சொலி கேட்டவுடனே
அப்பா என ஓடி வந்து
என் கழுத்தை அம்முக்குட்டி கட்டிக்கொள்கிறாள்
அவளை உச்சிமுகர்ந்து முத்தமிடும்போது
கண்களில் கசியும் நீரில்
அம்மா இருக்கத்தானே செய்வாள்

**அன்பில்பிரியன்**

நீண்ட நாளுக்கு பிறகான சந்திப்பு இருளில் நிகழ்வதில்
ஒரு பெரும் சங்கடம் இருக்கிறது
நீர்திரண்ட விழிகளை
விரல்கள் சந்திக்க முடிவதில்லை

இருளுக்குள்தான் அவள்
இன்னும் தெளிவாக தெரிந்தாள்
உள்ளங்கைக்குள் அடங்கிக் கொண்ட அவளது கையை இறுகப்பற்றி
உதட்டை குவித்து கன்னத்திற்கு குறிவைத்தான்
வெட்கம் தட்டிவிட்டதில் கன்னத்திலிருந்து தவறி
கழுத்தில் விழுந்தது முதல் முத்தம்
பிறகு காதுக்குள் தெறித்த மூச்சுக்காற்றால்
எத்தனையோ எங்கெங்கோ இருவருமே எண்ணவில்லை

நீண்ட நாளுக்கு பிறகான சந்திப்பு இருளில் நிகழ்வதில்
ஒரு பெரும் நன்மை இருக்கிறது
நீர்திரண்ட விழிகளை இதழ்கள்
சந்தித்து விடுகின்றன

**செந்தில் ஜெகன்னாதன்**

கடைசியாக ஓர்
கையசைத்தலுக்காவது
சற்று நீ தாமதித்திருக்கலாம்
உன் நிறுத்தம் வெறிச்சோடி
கிடக்கிறது நீயற்ற
அசௌகர்யங்களை உணரும்
தருணங்களில்

(z) **ஜபீர்**



# குறியீடுகளில் படிந்திருக்கும் நிழல்கள்

பழசு புதுசு என எத்தனை
வண்ணங்கள் இருப்பினும்
ஆதி வேர்களிலிருந்து குவிகிறது வாசம்

அம்மிக் கல்லை
திரும்பிப் பார்க்கும் மனதை
திருப்பியெடுக்க
கடினமாய் இருக்கிறது

ஒரு வாழ்க்கை முழுக்க
நேசித்துக் கொண்டிருக்க வேண்டிய
நெருக்கம்
தூரமாகின்றபோது
விழிகள் ஈரமாகின்றன
அது தவிர்க்க முடியாததும் கூட..

இதயத்தை சமீபித்து
ஈர நினைவுகளை மீட்டியபடி..
வசிப்பகத்தின் ஒவ்வொரு செங்கல்லிலும் ஒரு வியர்வைத்துளி
உலராமல் ஒட்டியிருக்கிறது

காலம்
பார்த்துப் பார்த்து
விரிசலற்ற உறவுகளுக்குள்
மதகுகளை வெட்டி விட்டாலும்
சுவர்களை முட்டிக்கொண்டு திரும்பும் நினைவுகளை
வெறுமனே
விட்டுச் செல்ல முடிவதில்லை.

அடுத்த தெருவிலிருந்து....,

அக்கா இன்று
பெரும் மழையில்
பிரியங்களின் பிடிக்குள்
ஞாபகங்கள் சுமந்து
நனையாமல் வந்திருந்தாள்
அக்கணமே
ஒட்டுப் போட்ட
ஒரு குடை கம்பியிலிருந்து
ஒரு கடல்
என் கண்களுக்குள்
இறங்க தத்தளிக்கிறேன்

பார்வைக்கெட்டிய தூரம்வரை
பச்சிலைகளால் செறிந்திருக்கும்
செழுமையான இவ்வெளி துளிர்த்து
எனக்குள் வேர்கள் பூக்க
பெரு நிழல் விரிகிறது

செல்லா காசாகிப்போகாமல்
பெறுமதிமிக்கதாக்கி
தன் உழைப்பை
நாணயமாக மாற்ற
இந்த மண்ணில்
மண்வெட்டியுடன் எமக்காய்
எத்தனை புரண்டிருப்பார்கள்
அப்பா அம்மா!

ரோஷான் ஏ.ஜிப்ரி

குறுகிப் போன மனிதனின் மூளையில்
காற்றை நிரப்பிக் கொண்டிருந்தார்கள்,
போதை அவனை
தன் மந்திரக் கோலில் கட்டி வைத்திருக்கிறது,
யோசனை தூரங்களில் நடந்து கொண்டேயிருக்கிறான்,
மாயவலைகளில் அவனே சிக்கிக் கொண்டு
மகிழம்பூ வனத்தில் படுத்திருப்பதாகச் சொல்கிறான்,
கதைகளுக்குள் அவனைக் கடத்திப் போவதும்,
கவிதைகளுக்குள் அவனை உறங்க வைப்பதும்,
அவர்களுக்குச் சுலபமாக இருக்கிறது...
அவர்களின் கைகளில் தொலை இயக்கியொன்று
எப்போதும் இயக்கத்தில் இருக்கிறதாம்,
அவர்கள் இயக்கும் போதெல்லாம்
அவன் உறங்கி விடுகிறான்,
அவனையே அவர்கள் திருடிச் சென்றுவிடுகிறார்கள்,
ஆனால், அவனுக்கு இன்னமும் தெரியவில்லை,
தான் காணவில்லையென்று...
அவனிடம் சொன்னபோது
அவனால் சிரிக்க மட்டுமே முடிகிறது,
அவன் இயக்கத்திற்கு
அவ்வளவு மட்டும்தான் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்!

முகமது பாட்சா



தூக்கிச்செல்லும் காற்றுக்கு...
என்ன ஆசையோ?
சருகின் மீது.

ம.செல்வகணேஷ்

# உதிரிப்பூக்கள்

பாதி எரிந்தும்
எரியாமலும் கிடக்கும்
அந்த உருவத்தை
யாரும் கண்டுகொள்ளவில்லை
அந்த பசு
வேகாததை தின்றுபோகிறது
திருஷ்டிபொம்மை

என்ன கோபமோ காக்கைக்கு
செத்த எலியை குதறி எடுக்கிறது
வடை ஏய்த்த நரியென
தெரிந்திருக்குமோ...?

காரில் செல்லும் பிள்ளை
பலூனையும்
பலூன் விற்பவளின்
பிள்ளை காரையும்
அதிசயமாகத்தான்
பார்க்கின்றன

கையீர்ப்பு விசை செய்கிறார்
போக்குவரத்து காவல்காரர்

விடிந்தது தெரியாமலும்
விழித்திருக்கிறது
தெரு விளக்கு
தன் வாலை கடிக்க
தன்னை தானே
சுற்றிக்கொண்டிருக்கிறது
தெரு நாய்

கையில்
தடியிருந்தும்
தன் மேல் கழியும்
காக்கையை அடிக்காமல்
காந்தி சிலை
அஹிம்சையோ

தலையில்
தூசியை தாங்கியபடி
காற்றை
சுத்தப்படுத்துகிறது
அகல சாலைக்கு
வெட்டுடப்போகும்
மரம்

முகத்தை
துணியால் மறைத்து
உள் நுழைந்தவர்
துணி அவிழ வருகிறார்
போதை தலைக்கேறி

அந்த சோக குயிலின்
ஓசை ஒலித்தபடி இன்னும்
திசையறியாமல்

தொடுக்கப்பட்ட பூமாலை
தொங்கிக்கொண்டிருக்கிறது
சவத்துக்கா சாமிக்கா
அறியாமல்.

**வீ.கதிரவன்**

எதையோ தேடிக்கொண்டிருக்கிறார்கள்
நிச்சயம் பரிச்சயமானதாக இருக்கக்கூடும்
நிதானமாக ஒருவர் பின் ஒருவராக
திசையறியாத வனத்தினுள்.

வேகமாய் ஓடுகிறார்கள்
தெரிந்தவை எல்லாம் வெறுமையாகக்
காட்சியளிக்கிறது

தனக்குத்தெரிந்த மொழிகளில்
ஆசுவாசப்படுத்திக்கொண்டு
வேகத்தின் விளிம்பில்
தடுமாறியதாய் பிதற்றிக்கொள்கிறார்கள்

முடிவினில் ஒருவன் மட்டும் நிதானமிழந்த
குரலில் இன்னுமா கிடைக்கவில்லை நிம்மதி
என்று சபித்துக்கொண்டே
விளிம்பின் பிடியில் உறக்கம்
கொண்டான்
யாரும் எழுப்பாதீர்கள்
இந்தக்கணம் மட்டுமே சுவாசம்
நிம்மதியாக இருக்கக்கூடும்

**கோவை சசிக்குமார்**

வருவதும் போவதுமாக இருக்கிறது
யாருமில்லாத வீட்டில்
பறவைகள்.

**முத்து.விஜயகுமார்**



# இன்னமும் இருக்கிறதா இவையெல்லாம்?

மஞ்சள் நீர் மறைத்து வைத்த பானை
பனை ஓலைக் கிண்ணத்து பதநீர்
வேப்பம்பழம் காக்கைஎச்சம் போர்த்திய வில்லுவண்டி
கரும்பசை மணக்கும் கட்டை வண்டி
கல்யாணமுருங்கை சூழ்ந்த கள்ளிவேலி
ஓதியம் போத்து அரணமைத்த ஓட்டுவீடு
பச்சைமூங்கில் கழி நுழைத்த பனங்குடுக்கைவண்டி
மாட்டுவாசனை மணக்கும் கழுத்துக்கயிறு
உதிரவாடை அடிக்கும் மூக்குக்கயிறு
மாட்டுக் கோமியம் மணக்கும் பூட்டுக்கயிறு
சாணி புழுக்கை சருகு மக்கிய எருமேடு
தவிடு கஞ்சி புண்ணாக்கு கிளறும் தொட்டிமட்டை
வைக்கோலை அரண்காக்கும் வட்டக் கவணை
காப்பு காய்க்க வைத்துக் களைப்பாறும்
நுகத்தடி ஏர்க்கால் கலப்பை
கொண்டையிலும் தொடையிலும்
குத்தித் திலகமிடும் தார்க்குச்சி
உத்திரத்தில் தலைஉரசும் மோர் பானை
கல்லிலும் மணலிலும் சாணையேற்றும் சவரக்கத்தி
உத்திரம் தாழ்வாரம் முற்றத்துடன் அருகால்படி
கூடம் பத்தாயம் தொம்பைக்கூடு இரட்டைக்கதவு
சிறுநீர் நனைத்த காற்சட்டை
சிறுதுண்டுக் கோவணம்
கருகமணி கோர்த்தக் கழுத்து
மார்பு மறைத்த மக்கட்டி
பானை கலயம் தூக்குச்சட்டி
வாளி கரண்டி துரப்பணம்
உளி பிச்சுவா சூரி மண்டா
தொரட்டி மம்பட்டி களைக்கட்டு
அருவாமணை பிக்காசு கோடாலி
சுளுக்கி பிரிமணை பிரிகூடு
கூடை முறம் விளக்குமாறு
கூடிச் செய்த கூட்டாஞ்சோறு....!!!

என் ஞாபக அருங்காட்சியகத்திலிருந்து இன்னமும்
தொலைந்துபோகாமல் இருக்கும் ஆவணங்கள்

அழ. இரஜினிகாந்தன்

# காதலும் வசப்படும்

தேகம் சரிந்திருந்தது
உணர்வுகளை தொலைத்து
உயிர் போகாத மரண நிகழ்வொன்றில்..!

ஊடுருவி என்னுள் அமர்ந்து கொண்டாய்
என் அசைவுகளுக்கான காரணி நீ..!

பாழ் நெற்றிக்கு
பவித்ர திலகமிட்டாய்...!

உனது பேரன்பு என்கிற அலையில்
அடித்து செல்லப்பட்ட பின்புதான்
கட்டுக்கடங்காத காதல்
வசப்படுத்தப்பட்டது
உயிரினும் மேலாய்..!

சொ.சாந்தி

# மனிதம்

வலுவிழந்துவிட்டது...
விரல்களற்ற என் பாதங்கள்...
கந்தல் மேலாடையெங்கும்
ரத்தக்கறைகள்...
கிழிந்து தொங்குகிற சதையில் துருத்திக்கொண்டிருக்கும்
துப்பாக்கி ரவைகள்...
பஞ்சடைத்த கண்களில்
சொட்டிக்கொண்டிருக்கிறது ரத்தம்...
செவிகளில் எப்போதும்
ஒலித்துக் கொண்டிருக்கும் ஒப்பாரிகள்...
பாதைகளெங்கும் முளைத்தபடியிருக்கும்...
துயரங்களின் கோரப்பற்கள்...
என்...
நகங்களற்ற கைகளில்
புறாவின் இறகு...

**ரூஃபஸ் வி ஆண்டனி**



தூரங்களின் சந்திப்பில்
முத்தங்களை பருகிக் கொண்ட சொற்கள்..,
நெருக்கங்களின் தொலைவுகளுக்குள் சிக்கித் தவிக்கின்றன...
மரித்தலும், உயிர்தெழுதலுமாய்.,
இருந்தும், இல்லாமல் போகச் செய்கிறது...
எனது இருப்பை...
உனதிந்த அருகாமை...!!!

***மீனு மீனா***

# மன்னித்து விடுங்கள்

பேருந்தின் நெரிசலில்
அடிக்கடி தலை திருப்பி
உங்கள் முகத்தில்
எண்ணையை
பூசி விடும் பெண்ணை
மன்னித்து விடுங்கள்
பின்னிருக்கையில்
யாரோ ஒருவரின்
மடியில் அமர்ந்திருப்பது
அவளின் குழந்தை...

வங்கியில்,
பதட்டமாக பேனாவை
இரவல் வாங்கிக்கொண்டு
தொலைந்து போன
கண்ணாடி அணிந்த
பெரியவரை மன்னித்துவிடுங்கள்
அவர் அடகு வைக்க வந்தது
இறந்துபோன
மனைவியின் தாலி

உணவகத்தில் மேசை
துடைக்கையில்
உங்கள் குழந்தையின்
கன்னம் தொட்டுப்பார்த்த
சிறுவனை மன்னித்துவிடுங்கள்
அவளுக்கு
உணவகத்தின் பின்புறமாக
பாத்திரம்
கழுவிக்கொண்டு இருக்கும்
அவனது தங்கையின் சாயல்...

கார் கண்ணாடியை
கழுவுகையில்,
அழுக்கு
விட்டுவிட்ட
இளைஞனை
மன்னித்துவிடுங்கள்..
அது
பொறியியல்
பட்டம்
பெற்ற பிறகு..
அவனுக்கு
கிடைத்திருக்கும்
முதல் வேலை..,

மண்டபத்தில்,,.
சிகரெட்
வாசனையோடும்,
அழுக்கு
சட்டையோடும்,
அருகே
வந்தமரும்,
தாடிக்காரனை
தயவு செய்து
மன்னித்துவிடுங்கள்,,
அது
அவனது,,
காதலியின்
திருமணம்..!!

**கவிதை மொழியன்**

# ஒரு நதியில் இறங்கிய மீன் குஞ்சு

ஒரு நதியில் இறங்கிய மீன் குஞ்சு
படித்துறைப் பாசியை
கொஞ்சம் தின்று விட்டு
நான் நதியை விழுங்கி விட்டேன் என்கிறது

என் கடல் என் நெஞ்சுக்குள் அலையடிக்க
கை நிறைய அள்ளுகிறேன் நுரைகளை

கண்ணுக்கு உறுத்தாத இளங்காலை வெயிலில்
புங்கை மரத்து இலைகளுக்குள் அகப்பட்ட
கையளவு வானத்தை எடுத்து
என் சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டேன்
இப்பொழுது விரிந்து கொண்டிருக்கிறேன்

அதிகாலையில் மஞ்சள் அரளிப்பூவுக்குள்
அலகினைப்புதைத்திருக்கும்
பெருவிரலளவேயான கருஞ் சிட்டிற்கு
அதைப்பற்றி எழுதப்பட்டுக்கொண்டிருக்கும்
இந்த கவிதையைப்பற்றி
எந்த அக்கறையும் இல்லை
தேன் உறிஞ்சுவதைத் தவிர

**தங்கேஸ்**

பிரசவிக்க இயலா வேதனையுடன்
நிறைசூலியாய் மனது
நினைவுகளுடன்!!

**அன்பி**



# குட்டையுமென் குழந்தையும்

குட்டையின் எதிரெதிர் கரைகளில்
நின்றிருக்கிறோம்
நானும் என் குழந்தையும்
அதன் மையம் நோக்கி
சிறு கல்லெடுத்து எறிகிறேன்
குழந்தை எறிந்த கல்
காலடியிலே விழுகிறது
தெளிந்ததும் குட்டையைப் பார்த்து சிரிக்கிறேன்
குழந்தை பார்க்க குட்டையும் சேர்ந்து
சிரிக்கிறது
பின்பு மெல்ல நீர் அள்ளி முகத்தில் பரப்புகிறேன்
குழந்தையோ தேன்துளியென அள்ளி
முத்துகள்போல் முகத்தில் பரப்புகிறது
சற்றுநேரம் கழித்து வலது காலை
நீட்டி நனைக்கிறேன்
அறிதலின் குறையில்
இடது காலை நனைக்கிறது குழந்தை
ஏதோவொரு தீய நினைவில்
ஐந்தெட்டு உள் நடந்து இடுப்பளவு
நீரிலிருக்கிறேன்
மூன்றெட்டு வைக்கயிலேயே
திடீரென குழந்தை மூழ்கிப் போகிறது
திடுக்கிட்டு எழுந்து
துணையின் புடைத்த வயிற்றில்
கை வைத்து உணர்ந்த பிறகே மெல்ல
ஆசுவாசமானேன்
குழந்தையோ கால்கள் அழுந்த மிதித்தெழும்பி
தலையை வெளிநீட்ட முற்படுகிறது.

**நுற்பவினைஞன்**

அதிகாலையில்
அனிச்சையாக அலைபேசியில்
அழைக்கத் தேடும் விரல்களையும்,

பரிசுப்பொதியினுள் பத்திரமாயிருக்கும்
பிடித்த நிறத்துச் சட்டையையும்,

பல வண்ணங்களில் பதியனிட்டுப்
பூத்திருக்கும் ரோஜாக்களையும்,
என்ன செய்வேன்??

இன்று..
இறந்தவனின் பிறந்தநாள்..

**மஞ்சு விஸ்வநாதன்**

# என் கடவுள்

எல்லா மரங்களும் அவைகளின் இடங்களில்
சிலுவைகளாகத்தொடங்கியது.!
சூனியக்காரியின் சுருக்குப்பைக்குள் அடங்கிப்போனது நதி.!
சகுனிகளின் கட்டங்களில் முடங்கிப்போனர்கள் பாண்டவர்கள்.!
முள்கிரீடங்களின் வழியே ரத்தத்தின் கடைசி நீரும்
ஆவியாகிக்கொண்டிருந்தது.
இவை யாவும் ரசித்துக் கொண்டே ஆகாயவிமானத்தில் வேறொரு
நாட்டிற்கு வறட்சி நிவாரணம் கொடுக்க சென்று கொண்டிருக்கிறார் என்
கடவுள்....!

**க.ராஜகுமாரன்**

கடும்பசியில் தான்
தற்கொலை முடிவெடுத்திருந்தேன்.
பூச்சிமருந்து குடித்தா,
தூக்கில் தொங்கியா,
தண்டவாளத்தில் தலை வைத்துச் சாவதாவென
பெருங்குழப்பத்தில்
திளைத்துக் கொண்டிருந்த எனக்கு
உங்களிடமிருந்து
பசிக்குக் கொஞ்சம் சோறு
திருடித் தின்றாலே
ஆதியிலிருந்து
இம்மரணம் நிச்சயமானதாய் உள்ளது.
இப்பொழுதும் கூட
இதையே பரிசளிப்பீரென
மிகவும் நம்புகிறேன். எப்பொழுதுமே.

**ஷைள**



நீங்கள் எமக்களித்த விதையது;
அதை சுதந்திரமென்றும் எமது அடையாளமென்றும்
மொழிந்தீர்கள்;
நீங்கள் அந்த விதையின்மேல் மழையென பொழிந்தீர்கள்;
அவ்விதை இன்று
துளிர்த்து,
கிளைத்து
வேரூன்றிவிருட்சமென
விரிந்து நிற்கிறது...
இப்போது நீங்கள் அதன் கிளைகளை அகற்றி இலைகளை கத்தரித்து
எல்லைகளையும் வரையறுத்து தருகிறீர்கள்..

**வித்யா**

# நீர் குடிக்கப் பயமா?

ஆம், குடித்தால்
சிறுநீரகத் தொட்டி
கொள்ளளவு எட்டியதும்
விடுதலை கேட்கும்
மூத்திரத்திற்கு
விடையென்ன சொல்வேன்?

ஆணைப் போல
அவசரத்திற்கு
திறந்துவிடப்படமுடியாத
உடல் வாகைவிட
நின்று சீறுநீர் கழித்தால்
ஒருத்தியை சமூகம்
எப்படி எடைபோடும்
என நினைக்கும்போதே
அடைத்துக் கொள்கிறது
அத்தனை துவாரங்களும்!

கழிவறைகள்?

நீங்கள்
அரசுப் பள்ளி பெண்கள் கழிப்பறையை
கண்டிருக்க வாய்ப்பில்லை,
கண்டபின் இப்படிக் கேட்கவும் தான்!

ஒரு ஆணின் சிறுநீரகத்தைவிட
ஒரு பெண்ணின் சிறுநீரகத்தில்
ஒரு பேக்டீரியப் படையெடுப்பு
எத்தனை இலகுவானதும்
இரக்கமற்றதும் தெரியுமா?

நீவிர் கண்டறிந்த
எந்த மருந்தையும்
மயிருக்கும் மதிக்காத
எத்தனை பேக்டீரியாக்கள்
ஜனித்திருக்கின்றன தெரியுமா?

ஒரு முறை தொற்றினால்
வலியென்ற சொல்லின்
உச்சபட்ச அர்த்தத்தை
நொடிக்கொரு முறை
நினைவூட்டிக் கொல்லும்,
மீண்டுவரத் தயங்காமல்!

சரி தீர்வு?

நுழையும் படியான
ஒரு கழிவறை?!

அன்றி
சிறுநீர்த் தொட்டியின்
கொள்ளளவு கூட்டல்
சாத்யமில்லை என்பதால்
அருந்தப் பயந்து சாதல்!

நீரின்றி அமையுமாம்
அரசுப்பள்ளி
மாணவியின் உலகம்!

**வினோதன்**

சதா ஓய்வின்றி நனைத்து நகரும்
உன் பேரன்பின் பெருநதியில்
ஒரு மலரென மிதந்து செல்லும்
என்னால்
பிரதியாக உனக்கு என்ன தந்து விட முடியும்.
உனக்கான இந்தக் கவிதையில்
ஒரு வார்த்தையாக
குறைந்தபட்சம்
ஒரு நிறுத்தக்குறியாகவாவது
காலமெல்லாம் இருப்பதைத் தவிர

**ஜி.சிவக்குமார்**

வண்ணங்களால்
உதாசீனப்படுத்தப்பட்ட கோட்டோவியம்
உதிர்ந்து கிடக்கிறது
ரோட்டோவியமாக....

ஓவியத்தின் உள்ளிருந்து
பசிக்கான
வண்ணத்தை குழைத்து  வரைக்கிறது
பார்க்கும் பார்வைத் திரைகளில்....

நடு ரோட்டிற்கு
வந்துவிட்ட படைப்பு கடவுளுக்கு
நன்றிசொல்கிறேன்
ஒரு கரித்துண்டின் கர்வத்தோடு.

எறியப்பட்ட காசு ஒன்று
சரியாக விழுகிறது கடவுளின் நெற்றியில்.

**பி.கே.சாமி**



கணிப்புகளுக்கு அப்பாற்பட்ட
வெறுமையின் ஏலாமை
நிறைந்து கிடந்தது கரிய நிறத்தினாலான
அந்தப் பின்னிரவில்...

கால்களை உரசியபடி படிந்திருந்தது
கீற்று வெளிச்சத்தின் பிரதியாய்
சாம்பல் நிறம் படிந்த நிழல்...

தனித்துக்கிடக்கும் நீண்ட வீதியின்
அடர் மௌனத்தை தனது மெல்லிய கூவலால்
கலைத்துவிட முயற்சிக்கிறது
துணையற்ற குயிலொன்று...

சொட்டுச்சொட்டாய் வடியும் இருளுக்குள்
கனம் கூட்டித் தொடர்கின்றன
இன்னமும் நம்பிக்கை தொலையாத காத்திருப்புகள்...

கலைந்து கலைந்து உருமாறும்
கனவுகளின் வலிகளில்
இருண்ட வானின் நட்சத்திரங்களென திசைகளறியாமல்
சிதறிக்கிடக்கின்றன நீ சிந்திய வார்த்தைகள்...

பேசுவதற்கு எதுவுமற்ற இயலாமை
கண்களின் வழியே சொட்டுகிறது...

உன்னிலிருந்து வெளியேறத்தான் வேண்டும்
எனக்குள்ளிருக்கும் நான்
கரைந்து காணாமல் போகும் முன்...

**ஜானு இந்து**



.

கண்மூடி தலை மின்னும்
சுருள்முடிக்காரனின் உதட்டோரப்புன்னகையில்
பற்றியெரிகிறது
ஒவ்வொரு கைம்பெண்ணின் ஆழ்மனமும்

காவி பூண்டு
கருமம் தவறிய பிருந்தாவனத்தில்
பூ வளர்த்தது அவ்வப்பிராணியின் கண்ணீர்

முண்டாசில் தலை புதைத்து
வறுமையை கருமையில் மறைத்தவன்
பொங்க அரிசியின்றி
பறவைகளுக்கிட்டவன் வீட்டில் செல்லாக்காசாகிய அவள்
பசி மறைத்தாள்
கண்ணீர் தோய்ந்த துணியால்

பெரும்பெயர் பெற்றவர்களெல்லாம்
பெரும்பேறு பெற்றவர்கள்
இணையில்லா துணை பெற்று.

**காயத்ரி**

புத்தகப் பக்கங்களை
திருப்பும் ஓசையில்
வேரறுந்த மரத்தின்
அழுகையொலியும்
கூடிழந்த பறவையின்
சிறகசைக்குமொலியும்
ஒலித்த வண்ணமிருக்கிறது.

**கோ.லீலா**

பூட்டிய அதன் சாவியை உலகத்திடையே கொடுத்து
காத்திருக்கத் தொடங்கினேன்,
எதிர்ப்பார்ப்பென்று எதுவும் இல்லை முழுமையன்றி....
கரைந்து போகலாம் அக் கடலினுள் என்றே
எண்ணத் தக்கைக் கொண்டு தகவமைத்துக் கொள்ள,
தரணியாக, மீப்பெரு கனவில் நாட்கள் கழிய....
தொலைவில் நின்றே பார்த்துச் சென்றவர், தொலைந்துப்
போய் தொலையச் செய்யாதவரென ஒரு புறம் இருக்க,
அருகு நெருங்கி ஒளிரும் சுடர் கண்டு சுற்றிச் செல்பவரும் உண்டு.
வெகு அரிதாய் நெருங்கிய ஒரு சிலரும்
திறவு கோலினை பயன்படுத்தத் தெரியாமல்
விழிப்பதைக் கண்டு, வருந்திப் பிறகு நகைத்துக் கொள்கிறேன்.
திறக்கப் படாமலே இறப்பெய்துகிறது
அன்பின் பெருவெளி ஒன்று...

**அகராதி**

இன்னமும் நம் பால்ய காலத்து
நினைவுகளை
தாங்கிக் கொண்டிருக்கும்
வாழ்ந்து கெட்ட
அந்த குட்டிச்சுவர்...

கொஞ்சம் கொஞ்சமாய்
கரைந்து கொண்டிருக்கிறது

நம் இளமையைப் போல்...

**பாரதி மணாளன்**

காகிதத்தின் நடுவில்
புள்ளியொன்றை நானிட்டேன்.
அதை நானென்றேன்...

புள்ளியைச்சுற்றி பெருவட்டமொன்றிட்டேன்.
அதை நீயென்றேன்.

என்னை நீ வட்டமிடுவதாக
எனக்கொரு அற்பஆசை.

இவ்வாசை காகிதத்தில் மட்டுமே....!!!

என் புள்ளிக்குள் நுண்புள்ளியொன்றை
நீ வைக்கிறாய்...
அது நீ என்கிறாய்...

உன்னை நான் வட்டமிடுவதே
உன் நிரந்தர ஆசை.

என் புள்ளி வட்டமாகிவிட்டது.
உன் புள்ளி மையம் ஆகிவிட்டது.

அப்படியே நடக்கட்டும்
மீனாட்சி....!!!

**ஆனந்த்**

மரத்தின் அடியில்
நிழலாய் இருக்கிறது
பகலால் விரட்டப்பட்ட இரவு

***சிவா முத்துக்குமரன்***



முன்னே சென்ற வெற்றுக்கூடுகள்
சொல்லாமல் விட்டுச்சென்ற
ரகசியங்களின் முடிச்சுகள்
மெதுவாய் அவிழ்க்கப்படும்
இன்னும் சில நொடிகளில் மேற்கின் அஸ்தமனம்
நிகழப்போகும் அத்தருணத்தில்
கடந்துவந்த தூசிபடிந்த பிம்பங்கள்
நினைவடுக்குகளில் ஒன்றன்பின்
ஒன்றாய் வந்து விலகிச்செல்லும்
தரைதொட்ட ஆழ்கடலின் அகழியில்
சூன்யமாய் சூழ்ந்த பேரிருள்
என்றோ உதயத்தின் முன்கண்ட
பழகிய இருளாய் பழக்கப்படும்
வீழ்ந்த சமுத்திமதில் கைகால்களை அசைத்து
கண்களின் கடைசி கண்ணயர்விற்க்கு முன்
அப்பெரும் சமுத்திரம் சட்டென
மொத்தமாய் அடர்த்தியில் குறைந்து
கனநொடியில் கையளவு
நீர்குடுவையாய் உருமாறி
தொப்பூழ் குழியின் வழியே
பிராணவாயுவை வெளியேற்றி
கொஞ்சம் கொஞ்சமாய்
கடுகளவில் ஒருவீதமுள்ள
நுண்ணிய விதைப்பந்தில்
மீண்டும் சுருங்கி அடைபட்டுப்போகும்
இலையுதிர் காலத்தில்
அஸ்தமனமும் நிகழ்ந்து முடியும்
கிழக்கில் மஞ்சள் கதிர்களின் ஒளிபரப்பி
விதையில் அடைபட்ட விருட்சம்
மீண்டும் துளிர்த்து வரும்
நன்னாளும் என்னாளோ

**ர.மதன் குமார்**

அன்பின் பாதையில்
கண்ணுக்கு தெரியா
பிளவை உண்டாக்கி
அதில் பிரிவென்னும்
விதைகளை தூவி மறைகிறாய்
வெட்டவெளி தனிமையில்
நிர்வாண உடல்கள்
படுக்கையில் வீழ்வது போல்
கண்ணீர் துளிகள்
நிலத்தில் வீழ்கிறது
துடைக்கும் கரங்கள்
துண்டிக்கப்பட்டு.
உன் சொற்களின்
வாசம் தேடி நகரும்
கால்களும் சிதைக்கப்பட்டு
துவண்டு மெல்ல நகரும்
எனது உடல்.
வெறுப்பின் நெருப்பில்
கருகுகிறது நேசத்தின்
மலர் ஒன்று
விளிம்பில் ததும்பி சிதறி உடைகிறது
அன்பின் கோப்பைகள்.

**கி.சம்பத்குமார்**

நம்பிக்கையொன்றில் தான்
தோற்றுவிடுகிறது
சோற்றுப்பருக்கை....
எறும்பிடம்......

**பொள்ளாச்சி முருகானந்தம்**

அதியனும் அவ்வையும்
நட்பாய் இருந்ததைக் கூட
அவளுக்கு மூப்பைக்
கற்பித்திருந்ததால்தான்
உனக்கு ஏற்பாய் இருந்தது

மானசீகமாய்க் கூட
காதலாகி கசிவது கடவுளாயினும்
உனக்கிசைவில்லை
மீராவோ திலகவதியோ

தனக்கான மொழியோ வெளியோ அற்று
உனக்கான ஒன்றாய்
தன்னை குறுக்கிக் கொள்ளும் பெண்

உன் மனவெளியில்
உருவப்பட்ட விலா எலும்பை
மீண்டும் பொருத்திக்கொள்வதாய்...

**சக்தி அருளானந்தம்**



பறக்கும் ஒவ்வொரு
பட்டாம்பூச்சியின் பின்னும்
என்னை அனுப்பிவிட்டு
மிச்சமிருக்குமென்னை
தூக்கி வருகிறேன்
வீட்டிற்கு

**மகேஷ் சிபி**

# மிகச்சிறந்த கோழைகள்

முகமெங்கும் வழியும் குருதியின்
பிசுபிசுப்பை துடைத்தபடி
கதறும் சிறுமி வீட்டுப்பாடம்
எழுதிக் கொண்டிருந்திருப்பாளா..?

வெட்டவெளியில் சத்தம் கேட்டாலே
பயப்படும் தங்கையை
அணைத்துக்கொண்டிருக்கும் சிறுவன்
தன் ரொட்டித்துண்டை அவளோடு
பகிர்ந்து கொண்டிந்திருப்பானா...?

நடப்பதென்னவென்று புரியாமல்
பெற்றோரை தொலைத்து கையேந்தும்
இரட்டை சிறுமிகள் ஓடிப்பிடித்து விளையாடிக்
கொண்டிருந்திருப்பார்களா...?

ரத்தம் கசியும் காயங்களோடு
மகளைக் தூக்கிக்கொண்டு ஓடும் தகப்பன்
அவளுக்கு உணவு ஊட்டிக்
கொண்டிருந்திருப்பானா...?

கால்கள் துண்டாகி மயங்கிக்கிடக்கும்
குழந்தை தொட்டிலுக்குள் இருந்தபடி
வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருக்குமா...?

பூக்களின் உயிர்களை
துப்பாக்கிகளால் துளைத்து
அதன் வேர்களை
வெடிகுண்டுகளால் அழித்துதான்
உங்கள் வீரத்தை காட்டவேண்டுமெனில்
வேடிக்கை பார்க்கும் அத்தனை
கடவுள்களைப்போலவே நீங்களும்
மிகச்சிறந்த கோழைகளே...!

**தனபால் பவானி**

கடந்துகொண்டிருக்கிற
காலத்துளிகள்
ஒவ்வொன்றிலும்
கழுவப்படாத
இரத்தக் கறைகள்!

நீதி நியாயங்களைப் புதைத்த கல்லறையில்
கொம்மாளமிடுகின்றன
பிரிவினைப் பேய்களும்
நிறவெறி நீசத்தனங்களும்
சாதி மதப் பித்துகளும்
அதிகார முதலைகளும்
ஆணவத் தலைமைகளும்!

சுற்றிச் சுழலும் காற்றில்
நிறைந்து கிடக்கிறது
இழப்பின் வலிகளும்
ஏராளம் கதறல்களும்!

கண்ணுக்கெட்டிய
தூரம்வரை
காணப்படவேயில்லை
மனிதம்!

**வளவன் கரிகாலன்**

இரண்டு நெகிழி குடங்களின் கழுத்தில்
மணிலா கயிற்றை கட்டி
மிதிவண்டி பின்புற தாங்கியில்
இரண்டு புறம் தண்ணீர் தளும்ப
வேகமாய் ஓட்டிக்கொண்டு
ராவுத்தர் பரோட்டா கடைக்கு
நீங்கள் கைகழுவ
வாய் கொப்பளிக்கப்போகும்
தண்ணீரைத்தான்
கொண்டு போகிறாள் ருக்கு;
குடத்திற்கு மூன்று ரூபா கொடுத்தால்
உங்களுக்கும் இரண்டு குடம்
தண்ணீர் இறைத்து கொணர்ந்து
தருவாள்
நாலு கிலோமீட்டருக்கப்பறமிருக்கும்
மணியக்காரர் வீட்டிலிருந்து;
அவள் வீடு திரும்பும்
மேல வீதித்தெரு
ரஸ்த்தாவில்
மார்பின் நடுநாயகமாய்
சீலை ஒதுங்கி
ரவிக்கை ஈரத்திலது
புடைத்து தெரிய,
வேகமாய் மணியடித்து
ஒதுங்கச்சொல்லும்
ருக்குவுக்கு வழிவிட்டுவிடுங்கள்;
பச்ச உடம்புக்காரியவளுக்கு
அப்பட்டமாய்
துணிக்கப்பால்
பால்சுரந்தே விடுகிறது...

**கோ. ஸ்ரீதரன்**



# விழுந்து கிடந்தேன்

சில வாய்களில்
போதையாய் புதைந்திருந்தேன்
சில வாய்களில்
பிச்சைக்காரனாய் நுழைந்திருந்தேன்
சில வாய்களில்
சோம்பேறியாய் உருமாறினேன்
சில வாய்களில்
புறம்போக்காய் உழன்றேன்

எந்த விரல்களும் என்னைத்
தீண்டவில்லை
எந்த முதுகுகளும் எனக்காக
வளையவில்லை

ஒரு நாள்
நிமிர்ந்து நின்றேன்

சில வாய்களில்
எனது பலம் பரிசோதனைக்குள்ளானது
சில வாய்களில்
எனது பலம் எவனுக்கோ உரியதானது
சில வாய்களில்
எனது பலம் தவறானவழியில் சேர்ந்தது
சில வாய்களில்
எனது பலம் பொய்யாய் போனது

எனது காதுகளின் வாசலை
முதலில் மூடினேன்
அழகானது மனம்
அழகானது நடை
அழகானது பாதை

விரக்தியின் விளிம்பில்
இன்னும் திறந்தேயிருக்குது
ஊர் வாய்கள்....

ஐ.தர்மசிங்

இருள்கிழிசல்களை
ஒளிக்கத்திகள்
கிழித்து நிர்மூலமாக்கும்
நிலம் பிரகாசிக்கும்
நிஜ சூரியன் நிலத்தில் முளைக்கும்
நீளும் கிழக்கும் வானும்

வேர்களின் உரைவீச்சில்
கிளைகளும் இலைகளும்
அடரமைதியில் உறையும்

புயலின் மவுனத்தில்
காற்றும் கதறும்

பொறுமையின் புதிர்சிரிப்பில்
அவசரம் விடைபெறும்

இயங்குதலின் அச்சில்
எல்லாம் இங்கே எளிதாகும்

இயல்பு திரியா இயல்பு
எங்கும் விரவிக் கோலோச்சியபடியே

ரா.ராஜசேகர்

## மக்கிய வாக்கும்
## மக்காத வறுமையும்

வண்டிவண்டியாய்
கொட்டிவைத்த
குப்பைகளில்
தேவையற்றதாய்
கிடக்கின்றன
எங்களின்
சின்னச் சின்ன
தேவைகள்
தேடியெடுத்து
கோணிப்பை
நிறைக்கிறோம்
கொலை செய்யப்பட்டு
அழுகி
முடைநாற்றம் வீசுகிறது
அன்று
வாசல்வரை வந்து
வணங்கிச் சொன்ன
தேசத்தின்
வாக்குறுதிகள்.

**க. மகுடபதி**

கறிக்கோழிகள் கூண்டுக்குள் முணுமுணுத்தபடி தமக்குள்.
இன்று வெட்டப்படுவது யாரெனத் தெரியாமல், தங்கள் ஆயுளை
நீடிக்கக் கோரி கடைக்குள்
இருந்த கடவுள் படத்திடம்
வேண்டிக்கொண்டு.....
நேற்று தன் சோடிகள் அறுக்கப்பட்ட அதிர்ச்சியில் ஆடுகள்
வாயே திறக்காமல்...
அவைகளும் கடவுளிடம்
உயிர்ப்பிச்சைக் கேட்டுக்கொண்டு வேண்டுதலில்....
நான்கடியில் வெட்டும் கத்தி ஒன்று
நல்ல உறக்கத்தில்.....
கடை திறந்த கசாப்புக்காரன்
இன்றைக்கும் நல்ல
வியாபாரத்திற்கு அதே
கடவுளிடமும் கல்லாவிடமும் வேண்டிக்கொண்டிருந்தான்.
கடந்து போன எனக்கு
படத்தில் கடவுள்
முகத்தைத் திருப்பி
கொண்டதாகவேபட்டது.

**மதுசூதன்**